**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,</u>

<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.</u>

<u>2022 ம் வருடம் ஜனவரி திங்கள் 05 ம் நாள் புதன்கிழமை</u>

**<u>அ.வ.எண்.279/2021 இல் இ.ம.எண்.02/2021</u>**

பொள்ளாச்சி தாலூக்கா, பஜார் தெரு, ஈஸ்வரன் செட்டியார் துணி வியாபார கடை, கதவு எண்.137, என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.வேணுகோபால் மகன் சுமார் 48 வயதுள்ள திரு.V.ராமநாதன்.

... மனுதாரர் / வாதி

/ எதிர் /

1. பொள்ளாச்சி தாலூக்கா, மகாலிங்கபுரம், காமராஜர் தெரு, கதவு எண்.11/6, என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.P.R.M.S.ராமநாதன் செட்டியார் மகன் சுமார் 68 வயதுள்ள திரு.R.முத்து கருப்பன்.

2. பொள்ளாச்சி தாலூக்கா, மகாலிங்கபுரம், காமராஜர் தெரு, கதவு எண்.11/6, என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.R.முத்து கருப்பன் மகன் சுமார் 30 வயதுள்ள திரு.M.ராமநாதன்.

.... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

மனுதாரர் / வாதியின் சுவாதீன அனுபவத்தில் உள்ள தாவா மனுச் சொத்தினை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்கள் வகையறாக்களோ, உறவினர்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2–ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 08.10.2021

இம்மனுவானது கடந்த 13.12.2021 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.இளங்கோ அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ள நிலையிலும், மனுதாரர் / வாதி தரப்பு வழக்கறிஞரின் வாதுரையைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**இறுதி உத்தரவு**

| | |
|---|---|
| 1. | முடிவாக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, மனுதாரர் / வாதியின் மனுச் சொத்தின் மீதான சுவாதீன அனுபவத்தை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்கள் வகையறாக்களோ, உறவினர்களோ சட்டத்திற்கு புறம்பாக எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று அசல் வழக்கு முடிவடையும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

**DESCRIPTION OF PROPERTY**

In Pollachi Town, in Bazzar Street, "Eswaran Chettiar" Cloth Merchant shop, tiled building bearing door No:137 with other appurtenants annexed thereon. Electric Service connection No:03-386-002-448.

இவ்வுத்தரவு 2022ம் வருடம் ஜனவரி மாதம் 05ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/-(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-----------------------------------

**<u>இறுதி உத்தரவு</u>**

அ.வ.எண்.279/2021

இல்

இ.ம.எண்.02/2021

நாள்: 05.01.2022

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-----------------------------------